DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM

**CC.No. 86/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW3 | Caste | : | |
| Name | : | தவமுருகன் | Age | : | 45 |
| F/N. | : | சோமசுந்தரம் | Occupation | : | மார்க்கெட்டிங் |
| Village | : | பாரதி நகர், இராமநாதபுரம் | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 06th day of December 2021.

06.12.2021.

முதல் விசாரணை:

நான் இராமநாதபுரம் பாரதி நகரில் குடியிருந்து கொண்டு மார்க்கெட்டிங் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 01.11.2016-ம் தேதி நான் இராமேஸ்வரத்திலுள்ள எனது மாமியார் வீட்டில் இருந்தபோது மாலை 05.00 மணியளவில் அசிங்கமான வார்த்தைகளால் திட்டிய சத்தம் கேட்டு வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த நான் வெளியே வந்து பார்த்தேன். அப்போது ஆஜர் எதிரி செந்தில்குமார் அசிங்கமான வார்த்தைகளால் எனது மனைவியின் அக்காவையும் மற்றும் குடும்பத்தினரையும் திட்டிக்கொண்டிருந்தார். அப்போது நான் பார்த்தபோது எனது மனைவியின் அக்கா கீழே கிடந்தார். அடித்ததை நான் நேரில் பார்க்கவில்லை. அசிங்கமாக திட்டிக்கொண்டிருந்தார். நான் போனவுடன் வெளியே சென்று விட்டார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

இல்லை.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM

**CC.No. 86/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW4 | Caste | : | |
| Name | : | மாரிமுத்து | Age | : | 36 |
| F/N. | : | சேகர் | Occupation | : | கம்பி கடையில் வேலை பார்க்கிறேன். |
| Village | : | முருங்கை வாடி இராமேஸ்வரம். | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 06th day of December 2021.

06.12.2021.

முதல் விசாரணை:

நான் இராமேஸ்வரம் முருங்கைவாடியில் குடியிருந்து கொண்டு கம்பி கடையில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. அடிபட்டு கிடந்தார்கள் நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். கடந்த 01.11.2016-ம் தேதி போலீசார் வரைபடம் வரைந்ததில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.2 ஆகும். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

போலீசார் வரைந்த வரைபடத்திலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். வரைபடத்தில் 5 என்ற எண்ணால் குறிப்பிட்டுள்ள இடம் தெரியும் என்றால் எங்கள் வீட்டிற்கு எதிரில் உள்ள வீடு யார் வீடு என்று தெரியாது. நான் எனது வீட்டின் முன்பாக வைத்துதான் கையொப்பம் செய்தேன்.